**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

***************

**ஊடக அறிக்கை**

## இரவீந்திரநாத் தாஹூரின் 160 ஆவது பிறந்ததின நினைவு கொண்டாட்டங்கள் இலங்கையில்

2021 மே 07ஆம் திகதி குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 160 ஆவது பிறந்ததின நினைவு நாள் அனுஸ்டிக்கப்பட்ட நிலையில் உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே மற்றும் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு கொழும்பில் மலரஞ்சலி செலுத்தியுள்ளனர். குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் பல்வேறு திறமைகள் ஒருங்கே சேரப்பெற்ற விற்பன்னர் என உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

2. இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் வருடாந்தம் வெளியிடும் ஹிந்தி சஞ்சிகையான ஸ்ரீலங்கா ஹிந்தி சமச்சார் சஞ்சிகையானது இம்முறை விசேட பதிப்பாக ரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்ததுடன் உயர் ஸ்தானிகரால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த சஞ்சிகையில் 70க்கும் அதிகமான புலமையாளர்கள் மற்றும் இந்தியா இலங்கையை சேர்ந்த ஹிந்தி மாணவர்களின் கட்டுரைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. இணைய ரீதியான நடன மற்றும் இசைப் போட்டி நிகழ்வுகள், ஆவணப்படங்களின் திரையிடல் போன்றவற்றுடனும் சுவாமி விவேகானந்தர் கலாசார நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒருவார கால தாகூர் ஜெயந்தி நினைவுநிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

4. 1913இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசினை பெற்றதன் மூலம் முதலில் நோபல் பரிசு பெற்ற இந்தியர் என்ற பெருமை குருதேவ் தாகூர் அவர்களுக்கு கிடைத்தது. இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் தேசிய கீதங்களை அவர் இயற்றியிருந்ததுடன் அவரது நோக்கு தத்துவம் மற்றும் படைப்புகள் தெற்காசியாவிலும் அதற்கப்பாலும் ஆழமான செல்வாக்கை செல்வாக்கினை தொடர்ந்து செலுத்தி வருகின்றன.

5. 1922, 1928 மற்றும் 1934 ஆகிய வருடங்களில் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த மூன்று விஜயங்களால் ரவீந்திரநாத் தாகூர் இலங்கை மக்களுடன் மிகவும் பலமான பிணைப்பினைக் கொண்டிருந்தார். குருதேவ் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட விஸ்வ பார்தி பல்கலைக்கழகம் பிரசித்தம்பெற்ற ஆனந்த சமரகோன் உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு கலைஞர்கள் மற்றும் புலமையாளர்களால் கவரப்பட்ட கல்விநிறுவனமாகும். கொழும்பு பல்கலைக் கழகத்தின் ஸ்ரீ பாளி பல்கலைக் கழகத்திற்கான அடிக்கல் குருதேவ் அவர்களால் நாட்டப்பட்டது. இலங்கையுடனான அவரது ஆழமான தொடர்பினை குறிப்பிடும் முகமாக 1500 பேருக்கான கொள்ளளவை உடைய கேட்போர் கூடமொன்று றுகுண பல்கலைக் கழகத்தில் இந்திய நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு குருதேவ் தாஹூரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

*********

கொழும்பு
8 மே 2021